தினமணி

இன்றைய வேளாண் செய்திகள்

02.12.2012 P.M

03.12.2012 A.M

## பிரெட் , கேக் , பிஸ்கெட் தயாரிப்பு பயிற்சிக்கு முன்பதிவு

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக தகவல் மற்றும் பயிற்சி மையம் சார்பில் பிரெட், கேக், பிஸ்கெட், பப்ஸ் ஆகியவற்றின் தயாரிப்பு பயிற்சிக்கு முன் பதிவு செய்யலாம் என அறிவித்துள்ளனர்.

இதுகுறித்து வெளியிடப்பட்டுள்ள செய்திக் குறிப்பு: சாதாரண மக்களும் எளிதாக பயன் பெறும் வகையில் பிரெட், கேக், பப்ஸ், பிஸ்கெட் ஆகியவை தயாரிப்பு பயிற்சி டிசம்பர் 6-ம் தேதி (வியாழக்கிழமை) நடைபெறுகிறது. பயிற்சி காலை 9.30 மணி முதல் மாலை 4.30 மணி வரை.

இதில் பயிற்சி கையேடு, குறிப்பேடு, மதிய உணவு மற்றும் சான்றிதழ் வழங்கப்படும். இப்பயிற்சியில் பங்கேற்க விருப்பமுள்ளவர்கள், பயிற்சி பற்றிய தகவல்கள் மற்றும் பயிற்சி கட்டணத்தை பேராசிரியர் மற்றும் தலைவர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக தகவல் மற்றும் பயிற்சி மையம், எண் யு-30, 10-வது தெரு, அண்ணா நகர், சென்னை-40 என்ற முகவரியில் தொடர்பு கொண்டு அறிந்து கொள்ளலாம். மேலும் விவரங்களுக்கு 26263484 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

## கடலோர மாவட்டங்களில் இன்று மழை பெய்யும்

வங்கக் கடலில் உருவாகியுள்ள காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி தென் வங்கக் கடலின் மத்திய பகுதியில் நிலை கொண்டுள்ளது. இதன் காரணமாக தமிழக கடலோர மாவட்டங்களில் திங்கள்கிழமை (டிசம்பர் 3) மழை பெய்யும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கடந்த சில நாள்களுக்கு முன்பு அந்தமான் கடலில் புதிய காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவானது. இது தமிழகத்தை நோக்கி நகர்ந்து வரும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஞாயிற்றுக்கிழமையன்று அந்த தாழ்வுப் பகுதி தென் வங்கக்கடலின் மத்திய பகுதியில் நிலை கொண்டுள்ளது.

அடுத்த 48 மணி நேரத்துக்குள் அது தீவிர காற்றழுத்தத் தாழ்வு பகுதியாக மாறக்கூடும் என வானிலை ஆய்வு மைய வட்டாரங்கள் தெரிவிக்கன்றன. இதனால் அடுத்த சில நாள்களுக்கு தமிழகத்தில் பரவலாக மழை பெய்யக் கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழகத்தின் உள் மாவட்டங்களில் வறண்ட வானிலை நிலவும். சென்னையைப் பொருத்தவரை வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். ஓரிரு இடங்களில் லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளது

**மேட்டூர் நீர்மட்டம் உயர்கிறது**

மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளதால், அணையின் நீர்மட்டம் நான்கு நாள்களில் 2 அடி உயர்ந்து 49.82 அடியாக உள்ளது.

கர்நாடக அணைகளிலிருந்து தண்ணீர் திறப்பது நிறுத்தப்பட்டதையடுத்தும், பருவ மழை பொய்த்ததாலும் மேட்டூர் அணைக்கு நீர்வரத்து குறைந்தது. இதனால், அணையிலிருந்து காவிரி டெல்டா பாசனத்துக்கு திறக்கப்படும் நீரின் அளவு வினாடிக்கு 12 ஆயிரம் கன அடியிலிருந்து ஆயிரம் கன அடியாக குறைக்கப்பட்டது.

இந்த நிலையில், அணைக்கு நீர்வரத்து விநாடிக்கு 3,762 கன அடியாக அதிகரித்துள்ளது. மேலும், அணையிலிருந்து திறக்கப்படும் நீரின் அளவு குறைக்கப்பட்டதால், நான்கு நாள்களில் அணையின் நீர்மட்டம் 47.96 அடியிலிருந்து 49.82 அடியாக உயர்ந்துள்ளது.

ஞாயிற்றுக்கிழமை மாலை நிலவரப்படி மேட்டூர் அணையின் நீர்மட்டம் 49.82 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 3,762 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது.

பாசனத்துக்காக வினாடிக்கு ஆயிரம் கன அடி நீர் திறக்கப்படுகிறது. அணையின் நீர்இருப்பு 17.69 டிஎம்சியாக உள்ளது.

02nd dec 2012 P.M

**தேயிலை விவசாயிகள் கவனத்துக்கு ...**

தேயிலை வாரியத்தின் மூலமாக வழங்கப்படும் மானியம் உள்ளிட்ட சலுகைகளைப் பெற்றுக் கொள்ளுமாறு தேயிலை விவசாயிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

÷இது குறித்து மலை மாவட்ட சிறு விவசாயிகள் சங்கத் தலைவர் ஐ. போஜன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பது:

÷கடந்த சில மாதங்களாக குன்னூர் தேயிலை வாரிய அதிகாரிகள் கோத்தகிரி மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் வீடு, வீடாகச் சென்று பசுந்தேயிலை விவசாயிகளின் தோட்டம் பற்றிய

விவரங்களைச் சேகரித்து வருகின்றனர். இதில் சில விவசாயிகளின் தோட்டங்கள் விடுபட்டு விட்டதாகக் கூறப்படுகிறது.÷அவ்வாறு விடுபட்ட தேயிலை விவசாயிகள் தேயிலை வாரியத்தின் மானியத்தைப் பெற்றுக்கொள்ள, கோத்தகிரி ரேபா காம்ப்ளக்ஸில் உள்ள சிறு விவசாயிகள் சங்க அலுவலகத்துக்கு வந்து அதற்கான விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்து கொடுக்கலாம். விவசாயிகளின் நலனுக்காக ஏற்படுத்தப்பட்டுள்ள இன்சூரன்ஸ் குறித்த விவரங்களையும் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம் என்று தெரிவித்துள்ளார்.

**தருமபுரி வன்முறைச் சம்பவம் : 40 ஏக்கர் நிலக்கடலை சேதம்**

தருமபுரி வன்முறைச் சம்பவம் அச்சத்தால் விவசாயப் பணிகளைச் செய்ய கூலி ஆள்களும், விவசாயிகளும் முன்வராததால் 40 ஏக்கரில் பயிரிடப்பட்டிருந்த நிலக்கடலை பூமிக்குள் புதைந்து சேதமடைந்தன.

தருமபுரியை அடுத்துள்ள நாயக்கன்கொட்டாய் கிராமத்தில் நவ.7-ஆம் தேதி ஏற்பட்ட வன்முறையால் நத்தம் காலனி, அண்ணாநகர், கொண்டம்பட்டி ஆகிய கிராமங்கள் தீவைத்து எரிக்கப்பட்டன.

இந்தச் சம்பவத்தில் தொடர்புடையதாக செல்லன்கொட்டாய், வாணியம்பாடியன் கொட்டாய், கோணங்கி நாயக்கனஹள்ளி மற்றும் சுற்றுப் பகுதிகளைச் சேர்ந்த 10-க்கும் மேற்பட்ட கிராமங்களில் வசிக்கும் 17 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள் 142 பேர் கைது செய்யப்பட்டனர்.

மேலும், சிலரைத் தேடி வருவதால் நவ.7-ஆம் தேதி இரவு கிராமத்தைவிட்டு வெளியேறிய ஆண்கள் யாரும் இதுவரை திரும்ப வரவில்லை. பெண்கள் மட்டும் குழந்தைகளுடன் அச்சத்துடனேயே வசித்து வருகின்றனர்.

மேலும், விவசாயக் கூலி வேலைக்கு வரும் பெண்களும் இந்தக் கிராமங்களில் வேலைக்கு வர அச்சப்படுகின்றனர். இதன்காரணமாக இந்தக் கிராமங்களில் பயிரிடப்பட்டுள்ளன அனைத்துப் பயிர்களும் சேதமடைந்து வருகின்றன.

குறிப்பாக செல்லன்கொட்டாய், வாணியம்பாடியான் கொட்டாய் ஆகிய இரு கிராமங்களில் மட்டும் 40 ஏக்கர் பரப்பில் பயிரிடப்பட்டுள்ள நிலக்கடலை சேதமடைந்தன. அறுவடைக்குத் தயாரான நிலக்கடலைகளை மண்ணில் ஈரப்பதம் உள்ள நிலையிலேயே பிடுங்கினால் மட்டுமே மகசூல் கிடைக்கும். ஆனால், ஒரு மாதமாக பராமரிப்பின்றி, தண்ணீர் இல்லாமல் நிலக்கடலை தோட்டங்கள் வறண்டு விட்டன. இதன்காரணமாக, மண்ணுக்குள்ளேயே அவை புதைந்துவிட்டன.

பூமிக்கு மேலே பச்சை வண்ணத்தில் இருந்த நிலக்கடலைச் செடிகளும் கருகி மக்கிவிட்டதால் செடி எது, களை எது என்பதே தெரியவில்லை. இதனால், நிலத்தை மண்வெட்டியால் தோண்டி ஏதாவது நிலக்கடலை மிச்சமிருக்கிறதா எனத் தேடும் வேலைதான் இப்போது நடைபெறுகிறது.

இதற்கான கூலியும் இருமடங்காக உள்ளது. இதனால், பலரும் நிலத்திலேயே புதைந்து

உரமாகட்டும் என அப்படியே விட்டுவிட்டனர்.

40 ஏக்கரில் பயிரிடவும், களை எடுக்கவும், உரம், பூச்சிக் கொல்லி மருந்து, கூலி ஆள்கள் செலவு என பல லட்சம் செய்த செலவு அனைத்தும் வீணாகிவிட்டது என இந்தப் பகுதி விவசாயிகள் புலம்புகின்றனர்.

இதுதொடர்பாக, வாணியம்பாடியன் கொட்டாய் கிராமத்தைச் சேர்ந்த ராஜாமணி கூறியது:

சுமார் 3 ஏக்கரில் நிலக்கடலை பயிரிட்டிருந்தோம். நவம்பர் முதல் வாரத்திலேயே அறுவடை செய்ய வேண்டியிருந்தது. ஆனால், வன்முறையால் கிராமத்தைவிட்டே அனைவரும் காலி செய்துவிட்டனர். பராமரிப்பு இல்லாமல் நிலக்கடலை அனைத்தும் வீணாகிவிட்டது. நிலக்கடலை மட்டுமல்லமாது மஞ்சள், துவரை உள்ளிட்ட பயிர்களிலும் மகசூல் இழப்பு ஏற்பட்டுள்ளது. எனவே, பாதிக்கப்பட்டோருக்கு உரிய இழப்பீடு வழங்க வேண்டும் என்றார் அவர்.

செல்லன்கொட்டாய் கிராமத்தைச் சேர்ந்த விவசாயக் கூலித் தொழிலாளி பழனியம்மாள் கூறியது:

வன்முறைச் சம்பவம் நடைபெற்று ஒரு மாதமாகியும் இன்னும் கிராமங்களில் ஆண்கள் யாரும் இல்லை. கூலி வேலைக்குச் செல்லும் பெண்களும் அச்சத்தால் வீட்டுக்குள்ளேயே முடங்கியுள்ளனர். இப்போதுதான் ஒரு சிலர் வேலைக்கு வரத் தொடங்கியுள்ளனர். ஆனால், விளைநிலங்கள் பராமரிப்பு இல்லாமல் ஒரு மாதமாக விட்டுவிட்டதால் சாகுபடி முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. வேலையும் இருமடங்காக உள்ளது. ஒருதரப்புக்கு மட்டுமே நிவாரணத்தையும், பாதுகாப்பையும் வழங்கும் மாவட்ட நிர்வாகம் மற்றொரு தரப்பினரை கவனிக்காமல் இருப்பது அரசு நிர்வாகத்தின் மீது அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது என்றார் அவர்.

## வங்கக் கடலில் காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி : நாளைமுதல் மழை பெய்யும்



வங்கக் கடலில் குறைந்த காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி நிலை கொண்டிருப்பதால் தமிழகம் மற்றும் புதுவையில் திங்கள்கிழமைமுதல் (டிசம்பர் 3) மழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

அந்தமான் தீவுகளுக்கு அருகில் கடந்த சில நாள்களுக்கு முன்பு குறைந்த காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி உருவானது. இது சற்று நகர்ந்து மத்திய கிழக்கு வங்கக் கடலில் வெள்ளிக்கிழமை நிலை

கொண்டிருந்தது. இப்போது இது தென் கிழக்கு வங்கக் கடலில் நிலை கொண்டுள்ளது. இதனால் திங்கள்கிழமைமுதல் (டிசம்பர் 3) தமிழகம் மற்றும் புதுவையில் மழை பெய்ய வாய்ப்புள்ளது என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது குறித்து வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் கூறியது: வங்கக் கடலில் உருவான குறைந்த காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி, ஆழ்ந்த காற்றழுத்தத் தாழ்வுப் பகுதியாக வலுவடைய வாய்ப்பு இருக்கிறது. இதனால் திங்கள்கிழமைமுதல் (டிசம்பர் 3) தமிழகம் மற்றும் புதுவையில் மழை பெய்யும். ஒருவேளை இது வலுவடையாமல், தமிழகத்துக்கு அருகில் குறைந்த காற்றழுத்தத் தாழ்வுப் பகுதியாகவே நீடித்தாலும் தமிழகத்தில் மழை பெய்யும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

## விதைப் பரிசோதனை செய்ய விவசாயிகளுக்கு அறிவுரை

தருமபுரி மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் தவறாமல் விதைப் பரிசோதனை மேற்கொள்ள வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக தருமபுரி விதைப் பரிசோதனை அலுவலர் ஆர்.பெரியசாமி கூறியது:

தரமான விதைகளே நல்ல விளைச்சலுக்கு ஆதாரமாக உள்ளன.

எனவே, விதைகளின் முளைப்புத் திறன் உள்ளிட்டவை குறித்து ஆராய்ந்து அதைத் தேர்வு செய்ய வேண்டும். இந்தக் குணங்கள் ஒவ்வொரு பயிருக்கு ஒரு வகையில் மாறுபடும்.

நல்ல முளைப்புத் திறன் கொண்ட விதைகளை உபயோகித்தால் மட்டுமே விதை செலவு குறையும். விதைகளை சேமிக்கும் போது பூச்சி நோய் தாக்குதலால் கெடாத வண்ணம் பாதுகாக்க வேண்டும். விதைகளின் முளைப்புத் திறனைக் காக்க விதைப் பரிசோதனை மூலம் ஈரப்பதத்தை தெரிந்து கொள்ளலாம்.

விதை விற்பனையாளர்கள் தங்களது இருப்பில் உள்ள விதையின் தரத்தை அறியவும், விவசாயிகள் தாங்கள் சேமித்து வைத்திருக்கும் விதையின் தரத்தை அறியவும் பரிசோதனை செய்து கொள்ள வேண்டும். விதை மாதிரிகளை எடுத்து வந்து பரிசோதனைக் கட்டணமாக மாதிரிக்கு ரூ.30 அளித்து பரிசோதனை செய்து கொள்ளலாம்.

மேலும், விவரங்களுக்கு விதைப் பரிசோதனை நிலையம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், தருமபுரி-5 என்ற முகவரியில் நேரில் தொடர்பு கொள்ளலாம்.

விவசாயிகள் அளிக்கும் விதைகளின் பரிசோதனை முடிவுகள் 30 நாள்களுக்குள் அவரவர் முகவரிக்கே அனுப்பப்படும் என்றார் அவர்.

## முட்டை விலை

நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு சனிக்கிழமை, அறிவித்த முட்டையின் பண்ணைக் கொள்முதல் விலை முட்டை ஒன்றுக்கு நாமக்கல்லில் ரூ.2.75, சென்னையில் ரூ. 2.80.

## சம்பா , தாளடி பயிர்களைக் காக்க நடவடிக்கை எடுக்க வலியு றுத்தல்

திருவாரூர் மாவட்டம், வலங்கைமான் பகுதியில் தண்ணீரின்றி கருகும் சம்பா, தாளடி பயிர்களைக் காப்பாற்ற நடவடிக்கை எடுக்குமாறு தமிழக அரசுக்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து வலங்கைமான் வட்டம், பயித்தஞ்சேரி பாசனதாரர்கள் சங்கத் தலைவர் வி. கண்ணன் சனிக்கிழமை விடுத்த அறிக்கை:

இந்த ஆண்டு மேட்டூர் அணை தாமதமாகத் திறக்கப்பட்டது. இருந்தபோதும் விவசாயிகள் சம்பா, தாளடி சாகுபடி பணிகளைத் தொடங்கினர். பருவமழை மூலம் சாகுபடி பணிகளை விவசாயிகள் முடித்தனர்.

தற்போது மேட்டூர் அணையிலிருந்து போதுமான தண்ணீர் கிடைக்காத நிலையிலும், பருவமழை பொய்த்ததாலும், வலங்கைமான் பகுதி அரவூர் வாய்க்கால் மூலம் பாசனம் பெறும் பயித்தஞ்சேரி, அரவூர், மாணிக்கமங்கலம், நார்த்தாங்குடி, நரிக்குடி, புலவர்நத்தம் உள்ளிட்ட பல்வேறு கிராமங்களில் சுமார் 15 ஆயிரம் ஏக்கர் சம்பா, தாளடி பயிர்கள் தண்ணீரின்றி காய்ந்து வருகிறது.

காவிரி டெல்டா பகுதி விவசாயிகளின் நலன் கருதி மத்திய அரசு கர்நாடகத்தை வலியுறுத்தி தண்ணீர் பெற்றுத்தர வேண்டும். மேலும், விவசாயத்திற்கு மும்முனை மின்சாரம் நாள் ஒன்றுக்கு 3 மணி நேரம் மட்டுமே வழங்கப்பட்டு வருகிறது. இதனால், சாகுபடிக்கு முழு அளவில் தண்ணீர் கிடைக்காத நிலை உள்ளது.

எனவே, விவசாயிகளின் நலன் கருதி டெல்டா மாவட்டங்களுக்கு நாள் ஒன்றுக்கு 15 மணி நேரம் மும்முனை மின்சாரம் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## பால் கொள்முதல் விலையை உயர்த்தக் கோரிக்கை

கர்நாடகத்தில் பால் கொள்முதல் விலையை உயர்த்தி வழங்க வேண்டும் என்று கர்நாடக விவசாயிகள் சங்கத் தலைவர் ராமரெட்டி வலியுறுத்தினார்.

பெங்களூரில் சனிக்கிழமை செய்தியாளர்களிடம் அவர் கூறியது:

பால் கொள்முதல் விலையை அரசு உயர்த்த வேண்டும் என்று விவசாயிகள் போராடி வந்தனர். அரசு ஏற்கெனவே நிர்ணயித்துள்ளவாறு, கர்நாடக பால் உற்பத்தியாளர் சங்கம் ஒரு லிட்டர் பாலை ரூ.19-க்கு கொள்முதல் செய்து, ரூ.2 ஊக்கத்தொகையாக வழங்கி வந்தது. அரசின் நிதியுதவி நிறுத்தப்பட்டதையடுத்து, தற்போது ரூ.19-க்கு மட்டுமே பால் கொள்முதல் செய்யப்படுகிறது. ரூ.2 வழங்கப்படுவதில்லை.

எனவே, அரசு உடனடியாக ஊக்கத்தொகை என்ற பெயரில் வழங்காமல், பால் கொள்முதல் விலையை ரூ.21 என்று உயர்த்தி வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார் அவர்.

தினமலர்

இன்றைய வேளாண் செய்திகள்

02.12.2012 P.M

03.12.2012 A.M

## விவசாய பணி ஆய்வு

ரெட்டியார்சத்திரம்:அழகுபட்டி அருகே கோவில்பட்டியில், திருந்திய நெல் சாகுபடி முறையில் விவசாய பணிகள் நடக்கிறது. மாவட்ட கலெக்டர் வெங்கடாச்சலம் ஆய்வு செய்தார். செம்மடைப்பட்டியில், சொட்டுநீர்ப் பாசன முறையில் மக்காச் சோள சாகுபடி, பருத்தி அணுசரனை ஆராய்ச்சித் திடல், அட்மா திட்ட நெல் சாகுபடி ஆகிய பணிகளை பார்வையிட்டார்.கலெக்டரின் நேர்முக உதவியாளர் கார்த்திகேயன், மாவட்ட வேளாண் மை துணை இயக்குனர் கிருஷ்ணமூர்த்தி, தரக்கட்டுப்பாட்டு உதவி இயக்குனர் செல்வராஜ், வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் விஜயராணி உடன் சென்றனர்.

## காய்கறி விளைச்சல் குறைவு :வியாபாரிகள் திண்டாட்டம்

திண்டுக்கல்:விளைச்சல் இல்லாததால் ஆந்திராவிலிருந்து தக்காளியும், கரூரிலிருந்து பச்சை மிளகாயும் வரவழைக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது.போதுமான அளவு மழை பெய்யாததால் காய்கறிகளின் விளைச்சல் குறைந்துள்ளது. வரத்து இல்லாததால் திண்டுக்கல் காந்தி மார்க்கெட்டில் அனைத்து காய்கறிகளின் விலையும் அதிகரித்துள்ளது.அவரை கிலோ ரூ.50 க்கும், முருங்கை 50, பச்சை மிளகாய் 20, மொச்சை 50, முள்ளங்கி 20, கத்திரிக்காய் 15, வெண்டை 15, தக்காளி 15, பாகற்காய் 15, பீன்ஸ் 25, பீட்ரூட் 10, வெங்காயம் 50 க்கு விற்கப்படுகிறது.ஆந்திராவிலிருந்து தக்காளியும், கரூரிலிருந்து பச்சை மிளகாயும் வரவழைக்கப்படுவதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

## பருவ மழையில்லைவிவசாயம் பாதிக்கும் அபாயம்

தாண்டிக்குடி:தாண்டிக்குடி மலைப்பகுதியில் பருவ மழையின்றி மலை விவசாயங்கள் பாதிக்கும் அபாயம் உள்ளது.தாண்டிக்குடி மலைப்பகுதியை பொறுத்தமட்டில் தற்போதைய தருணம் காபி, மிளகு, ஆரஞ்சு நாற்றுக்கள் நடவும் செய்வர். மழையை எதிர்பார்த்து நாற்றுக்கள் வாங்கி குவித்தும், நடவும் செய்தும் உள்ள விவசாயிகளுக்கு ஏமாற்றமே மிஞ்சியுள்ளது. பகலில் சுட்டெரிக்கும் வெயில் மாலை 3 மணிக்கு துவங்கும் பனியின் தாக்கம் என வறண்ட வானிலை நீடிக்கிறது. இதன் காரணமாக காபி பழங்கள் பழுப்பதில் தாமதம் ஏற்பட்டு சீசன் பாதித்துள்ளது.அவரை, பீன்ஸ், முட்டைக்கோஸ் நடவு செய்ய ஏற்ற தருணம் இதுவாகும்.

மழையின்றி இந்நடவும் பாதித்துள்ளது. கடந்தாண்டு ஆயிரத்து 500 மி.மீ., மழையை கடந்து கூடுதல் மழை கிடைத்தது. நடப்பாண்டில் இது மலைப்பகுதியில் கிடைத்தாலும் கடந்த இரு மாதத்தில் நிலவிய சீதோஷ்ண நிலை நீர் நிலைகள் குறைய காரணமாக உள்ளது.அக்டோபர் முதல் வாரத்தில் பெய்த 50.மி.மீ., மழையும், கடந்த இரு வாரங்களுக்கு முன் பெய்த 72.மி.மீட்டரை சேர்த்து 122.மி.மீ., மட்டுமே கிடைத்துள்ளது. மழையின்றி விவசாயம் பாதிக்கும் என விவசாயிகள் கருதுகின்றனர்.

## நெற் பயிரில் பூச்சி தாக்குதல்

தேனி:தேனி அருகே கோட்டூர், சீலையம்பட்டி, உப்பார்பட்டி, வீரபாண்டி கிராமங்களில் நெற் பயிர்கள் கதிர் பிடிக்கும் தருணத்தில் உள்ளது. இவற்றில், கதிர் நாவாய், சாறு உறிஞ் சும் பூச்சிகள் தாக்குதல், மணிகள் பால் பிடிக்கும் தருணத்தில் சாறுகளை முழுவதுமாக உறிஞ்சுவதால் மகசூல் இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது.பூக்கும் பருவத்தில் 100 கதிர்களில், 5 கதிர் நாவாய் பூச்சிகளுக்கு மிகுதியாக காணப்பட்டாலோ, பால் பிடிக்கும் பருவத்தில் 100 கதிர்களுக்கு 16 பூச்சிகளுக்கு மிகுதியாக காணப்பட்டாலோ, மாலத்தியான் 5 சதவீத பவு டர் 10 கிலோ ஏக்கருக்கு, அல்லது கார்பரில் 10 சதவீதம் 10 கிலோ ஏக்கருக்கு, அல்லது பென்தியான் 100 இசி, 200 மில்லி லிட்டர் வீதம் ஏக்கருக்கு தெளித்து கட்டுப்படுத்தலாம், என உதவி இயக்குனர் முத்துலட்சுமி தெரிவித்துள்ளார்.

## விவசாய சங்கக் கூட்டம்

கிருஷ்ணகிரி: தமிழக விவசாயிகள் சங்கத்தின் ஒன்றிய குழுக்கூட்டம், கிருஷ்ணகிரி பழையபேட்டையில் நடந்தது.

மாவட்ட மகளிர் அணி தலைவி பெருமா தலைமை வகித்தார். கிருஷ்ணன் முன்னிலை வகித்தார். குமார் வரவேற்றார். மாநில பொது செயலாளர் ராமகவுண்டர் தீர்மானங்கள் குறித்து பேசினார். "படேதளாவ் ஏரிக்கு தென்பெண்ணை ஆற்றில் எண்ணேகொள்புதூர் அருகே தப்பணை கட்டி தண்ணீர் கொண்டு வரவேண்டும். கிருஷ்ணகிரி சுற்றியுள்ள ஏரிகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும். கிருஷ்ணகிரி நகரின் அருகே விவசாயம் செய்பவர்களுக்கு அரசு எந்த மானியங்களும், உழவர் அட்டைகளும் வழங்கப்படுவது இல்லை. நகரின் அருகில் உள்ள விவசாயிகளுக்கும் அரசு அனைத்து சலுகைகளையும் வழங்க வேண்டும்' என்பன உள்ளிட்ட பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

## வெள்ளத் தடுப்பணை விவசாயிகள் வரவேற்பு

குளித்தலை: குளித்தலை சுற்று வட்டார பகுதிகளில், வெள்ளத் தடுப்பு அணைகள் அமைக்கும் பணியை, விவசாயிகள் வரவேற்றுள்ளனர்.

குளித்தலை, லாலாப்பேட்டை காவிரி டெல்டா பகுதியில் தற்போது, நெல் மற்றும் கரும்பு, வாழை

போன்ற பயிர்களை விவசாயிகள் பயிரிட்டுள்ளனர்.
கரூர் மாவட்ட கலெக்டர் ஜெயந்தி, மாவட்டம் முழுவதும் காட்டுவாரி மற்றும் வடிகால் வாய்க்காலில் வெள்ளத்தடுப்பு அணை அமைக்குமாறு, குளித்தலை பொதுப் பணித்துறை உதவி செயற்பொறியாளர் பொதுபணி திலகத்துக்கு தகவல் தெரிவித்தார்.இதையடுத்து, ஏ.இ., முருகேசன் மற்றும் பொதுப் பணித்துறை பணியாளர்கள், பொக்லைன் இயந்திரம் மூலம் சிவாயம் காட்டுவாரி, நங்கவரம் காட்டுவாரி, குளித்தலை காட்டுவாரி, பனையூர் காட்டுவாரிகளில் வெள்ளத்தடுப்பு அணைகள் அமைக்கும் பணிகள் தீவிரமாக நடந்து வருகிறது.
"மழை வெள்ளத்தில் இருந்து விவசாயிகளுக் கு பயன் அளிக்கும் வகையில், முன்கூட்டியே வெள்ளத்தடுப்பு அணை அமைப்பது மகிழ்ச்சி அளிப்பதாக' விவசாயிகள் தெரிவித்தனர்.

## கம்பு , கொண்டைக்கடலை பயிரிடலாம்

கரூர்: ""கார்த்திகை மாதத்தில் சாகுபடி செய்யப்படும் கம்பு, கொண்டைக்கடலைக்கு, அடுத்தாண்டு மார்ச், ஏப்ரல் மாதங்களில் அதிக விலை கிடைக்கும்,'' என வேளாண் பல்கலை, தேசிய வேளாண் புதுமை திட்ட உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தை தகவல் மைய இயக்குனர் அஜ்ஜன் தெரிவித்துள்ளார்.
அவர் விடுத்துள்ள அறிக்கை:
தமிழகத்தில் கொண்டைக்கடலை, கொத்தமல்லி, கம்பு கார்த்திகை பட்டத்தில் பயிரிடப்படும் முக்கிய பயிராக உள்ளது. கார்த்திகை மாதங்களில் கிராமப்புறங்களில் பயிரிடப்படும் தானிய பயிர்களில் கம்பு மிகவும் முக்கியமான ஒன்றாகும். மிகவும் வறட்சியான நிலையிலும் கம்பு நன்றாக வளரும் தானியமாகும். தற்போது கோழித்தீவனமாகவும், கால்நடைக்கு பச்சை தீவன மாகவும் கம்பு பயன்படுத்தப்படுகிறது.
இந்தியாவில் கடந்தாண்டில், 8.39 மில்லியன் ஹெக்டர் நிலத்தி ல் கம்பு பயிரிடப்பட்டதில், 8.88 மில்லியன் டன் உற்பத்தி கிடைத்தது. உற்பத்தி திறன் ஹெக்டருக்கு, 1,091 கிலோவாகும். அக்÷டாபர் மற்றும் டிசம்பரில் மழை பொழிவை பொறுத்தே கம்பு பயிரிடப்படுகிறது.
கோடைக்காலத்தில் மற்ற மாநிலங்களில் கம் பு இறவை பயிராக பயிரிடப்படுகிறது. தமிழகத்தில், 2009-10ம் ஆண்டில், 0.54 லட்சம் ஹெக்டர் பரப்பளவில் கம்பு பயிரிடப்பட்டு, 0.82 லட்சம் டன் உற்பத்தித்திறன் ஹெக்டருக்கு, 1,519 கிலோவாக உள்ளது. தமிழகத்தில் தூத்துக்குடி, விழுப்புரம், தேனி, விருதுநகர், கடலூர், திண்டுக்கல் மாவட்டங்களில், கம்பு அதிகளவில் பயிரிடப்படுகிறது. வர்த்தக தகவலின்படி நடப்பாண்டு கம்பு சாகுபடி பரப்பு குறைய வாய்ப்புள்ளது.
வேளாண்மை பல்கலையில் உள்ள, வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும் ஏற்றுமதி சந்தை தகவல் மையம், கடந்த, 16 ஆண்டுகளாக கோவில்பட்டி சந்தையில் நிலவிய கம்பின் விலையை ஆய்வு செய்தது. அதன்படி, கம்பு பயிரிடும் விவசாயிகளுக்கு அறுவடை மாதங்களான அடுத்தாண்டு மார்ச், ஏப்ரலில் குவிண்டாலுக்கு, 1,100

ரூபாயிலிருந்து, 1,200 ரூபாய் வரை விலை கிடைக்கும் வாய்ப்புள்ளது.

* இதேபோல் கொண்டைக்கடலை பயறு புரச்சத்து உணவு பொருளாக உள்ளதால், மாவு உற்பத்திக்கு பயன்படுகிறது. உலக உற்பத்தியில், 67.50 சதவீதம் இந்தியாவில் விளைவிக்கப் படுகிறது. அமெரிக்கா, சவுதி, அரேபியா, இலங்கை, மலேசியா நாடுகளுக்கு கொண்டைக்கடலை அ திகளவில் ஏற்றுமதி செய்யப் படுகிறது. செப்டம்பர் முதல் நவம்பர் வரை கொண்டைக் கட லை சாகுபடி செய்யப்படுகிறது.

தற்போது கொண்டைக்கட லை பயிரிடும் விவசாயிகளுக்கு, அறுவடை காலங்களில் விலை கிடைக்குமா? என, உடுமலைப்பேட்டை சந்தையில் கடந்த, 10 ஆண்டுகளின் விலை ஆய்வு செய்யப்பட்டது. அதில், தற்போது கொண்டை கடலையை சாகுபடி செய்தால், மார்ச், ஏப்ரல் மாதத்தில் கொண்டைக்கட லை கிலோ, 42 முதல், 45 ரூபாய் வரை விலை கிடைக்கும்.

எனவே, கார்த்திகை மாதங்களில் கம்பு மற்றும் கொண்டைக்கடலையை விவசாயிகள் தாரமாளமாக சாகுபடி செய்யும் பட்சத்தில், அறுவடை காலமான, அ டுத்தாண்டு மார்ச், ஏப்ரல் மாதங்களில், அதிக விலை கிடைக்கும்.

## பருவ நிலை காப்பீடு திட்ட தொகை

உளுந்தூர்பேட்டை: சிறுளாப்பட்டு கிராமத்தில் விதை கிராம திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு பருவ நிலை காப்பீடு திட்ட தொகை வழங்கப்பட்டது. திருநாவலூர் ஒன்றியம் சிறுளாப்பட்டு கிராமத்தில் விதை கிராம திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. திருந்திய நெல் சாகுபடி தொழில்நுட்ப முறைகள், அரசு வழங்கும் மான்ய திட்டங்கள் குறித்து வேளாண் உதவி இயக்குநர் தேவநாதன் கூறினார். வேளாண் இணை இயக்குநர் சேகர், 28 விவசாயிகளுக்கு பருவ நிலை காப்பீடு திட்ட தொகை வழங்கினார். வேளாண் துணை அலுவலர் நெடுஞ்செழியன் வரவேற்றார். ஒன்றிய கவுன்சிலர் வரதமலை, ஊராட்சி தலைவர் தேவராசு முன்னிலை வகித்தனர். விதை சான்று உதவி இயக்குநர் வேலாயுதம், திண்டிவனம் வேளாண் அறிவியல் நிலைய உதவி ஆசிரியர் செந்தில்வேலு, உதவி வேளாண் அலுவலர்கள் கோபாலகிருஷ்ணன், ராஜ்குமார், பழனிசாமி, சிவக்குமார், பழனிவேலு, ஆத்ம திட்ட அலுவலர்கள் கவிதா, சிவபெருமாள் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர்.

## மூலிகை ச் செடி பாதுகாப்பது குறித்த விழிப்புணர்வு முகாம்

ராசிபுரம்: சென்னை சி.பி.ராமசாமி அய்யர் பவுண்டேசன், ஓ.சவுதாபுரம் பஞ்சாயத்து மற்றும் யார்ட்ஸ் தொண்டு நிறுவனம் சார்பில், "மூலிகைச் செடிகளை பாதுகாப்போம்' என்ற தலைப்பில், விழிப்புணர்வு முகாம், ராசிப்பாளையம் ஊராட்சி துவக்கப்பள்ளியில் நடந்தது.

பஞ்சாயத்து தலைவர் ரஞ்சித்குமார் தலைமை வகித்தார். யார்ட்ஸ் நிறுவன செயலாளர் சரவணக்குமார் வரவேற்றார். ஆத்தூர், காட்டுக்கோட்டை ஆரம்ப சுகாதார நிலைய சித்தா டாக்டர் பூபதிராஜா, மூலிகை செடிகளை பாதுகாப்பாக வளர்ப்பது குறித்து பேசினார்.

உள்நாட்டில் உள்ள மூலிகை தாவரங்களின் பெயர்கள், அவற்றின் மகத்துவம், அதனால் ஏற்படும் நன்மை, அவை அழிவதற்கான காரணம் குறித்தும் விளக்கப்பட்டது. மேலும், துளசி, கற்றாழை, கீழாநெல்லி, வேம்பு, கற்பூரவல்லி, தூதுவளை, திருநீற்றுப்பச்சை, கோவைச்செடி உள்ளிட்ட பல்வேறு மூலிகை செடிகளை வீட்டுத் தோட்டத்தில் வளர்ப்பது பற்றி அறிவுறுத்தப்பட்டது.
அதை தொடர்ந்து, அரிய வகை மூலிகைச் செடிகளின் பாதுகாப்பை வலியுறுத்தி, மனிதச்சங்கிலி நடந்தது. முகாமையொட்டி, வினாடி-வினா போட்டி நடத்தப்பட்டு, வெற்றி பெற்றவர்களுக்கு, பரிசு வழங்கப்பட்டது.
பள்ளி தலைமையாசிரியர் கண்ணாம்பாள், நிறுவன ஒருங்கிணைப்பாளர் கமலம், ஆசிரியர்கள், மாணவ, மாணவியர் உட்பட பலர் பங்கேற்றனர்.

## தென்னை விவசாயிகளுக்கு காப்பீடு திட்டம் : மாவட்ட கலெக்டர் தகவல்

நாமக்கல்: ""நாமக்கல் மாவட்டத்தில், தென்னை சாகுபடி விவசாயிகளுக்கு காப்பீடு திட்டம் விரைவில் வர உள்ளது," என, மாவட்ட கலெக்டர் ஜகந்நாதன் தெரிவித்தார்.
நாமக்கல் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்ட அரங்கில், விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடந்தது. மாவட்ட கலெக்டர் ஜகந்நாதன் தலைமை வகித்து பேசியதாவது:
விவசாய குறைதீர் கூட்டத்தில், விவசாயிகளிடம் உரிய கருத்து பெறப்பட்டதன் அடிப்படையில், பல்வேறு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. குறிப்பாக, நாமக்கல் மாவட்டம் மழைக் குறைவான மாவட்டம் என்பதால், என்னென்ன பயிர் செய்யலாம் என்பது குறித்து, கூட்டத்தில் பங்கேற்ற விவசாயிகளுக்கு விளக்கி கூறப்பட்டுள்ளது.
நில அளவையர்கள், சம்மந்தப்பட்ட விவசாயிகளை வைத்து, முறையாக நில அளவீடு செய்ய வேண்டும். விவசாயின் பெயர் உள்ளிட்ட விவரங்களுடன் மனு அளித்தால், சம்மந்தப்பட்ட தாசில்தார் மூலம் ஏரி, குளத்தில் மண் எடுக்க விவசாயிகளுக்கு அனுமதி அளிக்கப்படும்.
தற்போதைய நிலவரப்படி, லாபம் தரும் பயிர்களை, வேளாண் அதிகாரிகள், விவசாயிகளுக்கு கூற வேண்டும். நாமக்கல் மாவட்டத்தில், தென்னை சாகுபடி விவசாயிகளுக்கு, காப்பீடு திட்டம் விரைவில் வர உள்ளது. தென்னையில், பல்வேறு நோய் தாக்கம் ஏற்பட்டு பயிர்கள் கருகும் நிலையில் உள்ளதாக, விவசாயிகள் தெரிவித்தனர். அதன்பேரில், தென்னை வாரியத்திலிருந்து விஞ்ஞானிகள் வரவழைக்கப்பட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். தென்னை விவசாயிகளுக்கு, வேளாண் அறிவியல் நிலையம் மூலம் தனியாக கருத்தரங்கு நடத்தவும் ஏற்பாடு செய்யப்படும்.
இவ்வாறு அவர் பேசினார்.
முன்னதாக, கடந்த மாதம் விவசாயிகளிடம் இருந்து, 93 மனுக்கள் பெறப்பட்டன. அவற்றில், 63 மனுக்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து, விவசாயிகளிடம் தெரிவிக்கப்பட்டது. மாவட்ட

வருவாய் அலுவலர் செங்குட்டுவன், வேளாண் இணை இயக்குனர் பிரபாகரன், கூட்டுறவு சங்க இணைப்பதிவாளர் முத்துகுமாரசாமி உட்பட பலர் பங்கேற்றனர்.

## தோட்டக்கலை பயிர் உற்பத்தியை பெருக்க மாதிரி தகவல் மையம்

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில் தோட்டக்கலை பயிர் உற்பத்தியை பெருக்க, தோட்டக்கலை மாதிரி தகவல் மையங்கள் உருவாக்கப்பட்டுள்ளது.

தர்மபுரி மாவட்டம், மலை மற்றும் மலை சார்ந்த கிராமங்களை அதிகம் கொண்ட மாவட்டம். விவசாயம் இங்கு பிரதான தொழிலாக உள்ளது. மா, கரும்பு, மஞ்சள், தென்னை, நெல் ஆகியவை மாவட்டத்தில் சாகுபடி செய்யப்படும் முக்கிய பயிர்களாகும்.

கடந்த சில ஆண்டுகளாக மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் தோட்டக்கலை துறை பயிரான காய்கறிகள், மலர்கள் உள்ளிட்டவைகளை ஆர்வத்துடன் சாகுபடி செய்து வருகின்றனர். அவற்றிக்கு கிடைக்கும் மானியங்கள் மற்றும் பராமரிப்பு, சந்தை படுத்தல் குறித்துமுழு தகவல்கள் கிடைக்காமல் பெரும்பாலனா விவசாயிகள் அவதியடைந்து வந்தனர்.

தோட்டக்கலைத்துறை பயிர் சாகுபடி, பராமரிப்பு, சந்தைபடுத்துதல், மானியம் குறித்து அனைத்து விவசாயிகளும் தெரிந்து கொள்ளும் வகையில் தோட்டக்கலைதுறை சார்பாக மாவட்டத்தில், ஐந்து மாதிரி தகவல் மையங்களை அமைத்துள்ளது.

தோட்டகலைத்துறை துணை இயக்குனர் கலைச்செல்வி கூறியதாவது:

தர்மபுரி மாவட்டத்தில் தோட்டக்கலைத்து துறை பயிர்கள் சாகுபடி அளவவை அதிகரித்து வருகிறது. சிறு,குறு விவசாயிகளுக்கு தோட்டக்கலைத்துறை பயிர்களுக்கு, நூறு சதவீதம், இதர விவசாயிகளுக்கு, 75 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது. புதிய ரகங்களுக்கு மானியம் வழங்கப்படுவதுடன் அவற்றை பாரமரிப்பது குறித்து விளக்கம் அளிக்கப்பட்டு வருகிறது. தோட்டக்கலை பயிர்களை சாகுபடி செய்யும் விவசாயிகள் இது குறித்து முழு அளவில் தெரிந்து கொண்டு மேலும் பரப்பளவை அதிகரிக்க தோட்டக்கலை துறை சார்பாக முதற்கட்டமாக தர்மபுரி வெள்ளளோலை, நல்லம்பள்ளி யூனியனில் பேளஹள்ளி, பாலக்கோட்டில் கும்மானூர், காரிமங்கலத்தில் இண்டமங்கலம், பாப்பிரெட்டிப்பட்டியில் பொ.மல்லாபுரம் ஆகிய, ஐந்து கிராமங்களில் தோட்டக்கலை மாதிரி மையங்கள் உருவாக்கப்பட்டுள்ளது.

ஐந்து மையங்களும் தோட்டக்கலைத்துறை அலுவலர்களின் நேரடி கட்டுப்பாட்டில் இயங்குவதுடன், தோட்டக்கலைத்துறை உதவி அலுவலர்கள் ஐந்து பேர் நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் விவசாயிகளுக்கு தேவையான விளக்களை அளித்து அவர்களின் வருமானத்தை பெருக்க தேவையான நடவடிக்கை எடுத்து வருகின்றனர். இத்திட்டம் மேலும் பல கிராமங்களில் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது, என அவர் கூறினார்.

## மின் வெட்டால் சம்பா நெற்பயிர்கள் கருகின

கம்மாபுரம்: விருத்தாசலம், திட்டக்குடி தாலுகாகளில், தொடர் மின் வெட்டு காரணமாக போர்வெல் பாசன வயல்கள் ஈரப்பதமின்றி வெடிப்போடி, சம்பா நெற்பயிர்கள் கருகியதால், விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். மாவட்டத்தில் சம்பா, குறுவை பட்டங்களில் தான் அதிகமாக நெல் பயிரிடப்படும். கடந்த ஆண்டு சம்பா பருவத்தில் 2 லட்சத்து 75 ஆயிரம் ஏக்கரில் நெல் பயிரிடப்பட்டது.
சம்பா நடவு தாமதம் கடந்தாண்டு அறுவடைக்குத் தயாரான நெல் பயிர்கள் "தானே' புயல் தாக்குதலில் பாதிப்படைந்தன. மேலும், தொடர்ந்து நிலவிய மின்வெட்டு காரணமாக புயல் பாதித்த பகுதிகளில் அடுத்தடுத்து வந்த நவரை, குறுவை பட்டங்கள் தாமதமாகின.இதனால் கடலூர் மாவட்டத்தில், இந்தாண்டு சம்பா நடவு தாமதமாக துவங்கியது. சிதம்பரம், காட்டுமன்னார்கோவில் டெல்டா பகுதிகளில் ஒரு லட்சத்து 2 ஆயிரம் ஏக்கரிலும், பண்ருட்டி, குறிஞ்சிப்பாடி, கடலூர், சிதம்பரம், காட்டுமன்னார்கோவில், விருத்தாசலம், திட்டக்குடி ஆகிய ஏழு தாலுகாகளில் போர்வெல் பாசனம் மூலம் ஒரு லட்சத்து 40 ஆயிரம் ஏக்கரில் சம்பா நடவு செய்யப்பட்டுள்ளது.

இதில் 85 சதவீதம் நேரடி நெல் விதைப்பு மூலமும், 15 சதவீதம் நாற்று விட்டும் நடவு செய்யப்பட்டுள்ளது. 60 ஆயிரம் ஏக்கரில் விருத்தாசலம், திட்டக்குடி தாலுகாகளில் மட்டும் 60 ஆயிரம் ஏக்கரில் சம்பா நடவு செய்யப்பட்டுள்ளது. போர்வெல் மூலம் பாசனம் பெறும் இப்பகுதிகளில் தற்போது நெற்பயிர்கள் கதிர்விடும் பருவத்தில் உள்ளன. இந்நிலையில், ஒரு மாதத்திற்கும் மேலாக விருத்தாசலம், கம்மாபுரம், திட்டக்குடி, பெண்ணாடம், மங்கலம்பேட்டை பகுதிகளில் 18 மணி நேரம் வரை மின் நிறுத்தம் செய்யப்படுவதால், பாசனத்திற்கு போர்வெல்லை இயக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. வயல்களில் ஈரப்பதமின்றி வெடிப்போடியுள்ளதால், கதிர் வரும் பருவத்திலுள்ள சம்பா நெற்பயிர்கள் கருகும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இதனால் சம்பா பயிர் செய்த விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

3 மணி நேரம் மின்சாரம்

போர்வெல் பாசனம் மூலம் 7 ஏக்கரில் சம்பா நடவு செய்துள்ள கம்மாபுரம் விவசாயி பாலா கூறுகையில், "நடவு செய்து 40 நாட்களாகிறது. ஏக்கருக்கு இதுவரை 8 ஆயிரம் ரூபாய் வரை செலவு செய்துள்ளேன். தற்போது கதிர் வரும் பருவத்தில் மின் தட்டுப்பாடு அதிகரித்துள்ளது. கம்மாபுரம் பகுதியில் நள்ளிரவு 12 முதல் 3 மணி நேரம் மட்டுமே மும்முனை மின்சாரம் வழங்கப்படுகிறது. 21 மணி நேரம் மின்வெட்டு இருப்பதால், 3 மணி நேரத்தில் பயிருக்கு தேவையான அளவு போர்வெல் பாசன தண்ணீரை இறைக்க முடிவதில்லை. இதனால் வயல்கள்

ஈரப்பதமின்றி பயிர்கள் கருகியுள்ளன. இதே நிலை நீடித்தால் சம்பா நெற்பயிர்களை காப்பாற்ற முடியாது. இப்பகுதி விவசாயிகள் நலன் கருதி மும்முனை மின்சாரம் வழங்கும் நேரத்தை அதிகரிக்க வேண்டும்' என்றார்.

தினகரன்

இன்றைய வேளாண் செய்திகள்

02.12.2012 P.M

03.12.2012 A.M

**அடுத்த ஆண்டு முதல் சத்துணவு திட்டத்தில் தினம் 60 லட்சம் முட்டை**



கோவை : தமிழகத்தில் சத்துணவு திட்டத்தில் அங்கன்வாடி மையங்கள் மற்றும் பள்ளி சத்துணவு மையங்களுக்கு அடுத்த ஆண்டில் தினமும் 60 லட்சம் முட்டை வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. தமிழகத்தில் சத்துணவு திட்டத்தின் கீழ் மதிய உணவு, முட்டை வழங்கப்பட்டு வருகிறது. ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டத்தில் செயல்படும் அங்கன்வாடி மையங்கள், அரசு பள்ளிகளில் சத்துணவு திட்டம் செயல்படுத்தப்படுகிறது. 2 வயது முதல் 5 வயது வரையுள்ள குழந்தைகளுக்கு அங்கன்வாடி மையங்களில் முட்டை வழங்கப்பட்டு வருகிறது. அரசு பள்ளிகளில் 1 முதல் 10ம் வகுப்பு வரை படிக்கும் மாணவ மாணவிகளுக்கு முட்டை வழங்கப்படுகிறது.

நடப்பாண்டில் பள்ளிகளில் 48.63 லட்சம் மாணவ, மாணவிகள் சத்துணவில் முட்டை சாப்பிட்டு வருகின்றனர். 2012,13ம் ஆண்டில் சுமார் 60 லட்சம் மாணவ மாணவிகளுக்கு தினமும் முட்டை வழங்க தமிழக அரசு திட்டமிட்டுள்ளது. இதற்காக நாமக்கல், திருப்பூர் உள்ளிட்ட மாவட்டங்களில் இருந்து ஒப்பந்த முறையில் முட்டை கொள்முதல் செய்யவுள்ளது. 590 மையங்கள் மூலமாக தினமும் முட்டை கொள்முதல் செய்யப்படும் என்று ஒரு அதிகாரி தெரிவித்தார்.


**கடலோர மாவட்டத்தில் மழை பெய்ய வாய்ப்பு**



சென்னை : வங்கக் கடலில் தென் கிழக்கு பகுதியில் குறைந்த காற்றழுத்தம் நிலை கொண்டு இருப்பதை அடுத்து கடலோர மாவட்டத்தில் மழை பெய்ய வாய்ப்பு உள்ளது என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. அந்தமான் அருகே கடந்த 4 நாட்களுக்கு முன்பு ஒரு குறைந்த காற்றழுத்தம் உருவானது. அது மெல்ல மேற்கு நோக்கி நகரும் தன்மை கொண்டதாக இருந்தது. அது நேற்று முன்தினம் மாலை வரை அந்தமான் பகுதியில் நிலை கொண்டு இருந்தது. நேற்று மாலை அந்த குறைந்த காற்றழுத்தம் மெல்ல நகர தொடங்கியுள்ளது. இப்போது சென்னைக்கு 500 கிமீ தொலைவில் நிலை கொண்டுள்ளது.

இதன் காரணமாக நேற்று தமிழகம், புதுச்சேரி கடலோரப் பகுதியில் லேசான மழை பெய்யத் தொடங்கியது. அந்த குறைந்த காற்றழுத்தம் மேலும் வலுப்பெற வாய்ப்புள்ளது. மேலும் அது மேற்கு நோக்கி நகர்ந்து நேற்று இரவு தென் கிழக்கு வங்கக் கடல் பகுதியில் மையம் கொண்டது. இதனால் இன்று முதல் தமிழகம், புதுச்சேரியில் தொடர்ந்து மழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

**சின்ன வெங்காயம் விலை 3 மடங்காக உயர்ந்தது**




தூத்துக்குடி : தூத்துக்குடி மாவட்டத்தில் இரு வாரங்களில் சின்ன வெங்காயம் விலை 3 மடங்காக அதிகரித்துள்ளது. கிலோ ரூ.70க்கு விற்பனையானது.

ஒட்டன்சத்திரம், உடுமலைப்பேட்டை, தஞ்சாவூர், திருச்சி, திண்டுக்கல், நாசிக், புனே மற்றும் ஆந்திராவில் இருந்து தூத்துக்குடி காய்கறி மார்க்கெட்டுகளுக்கு வெங்காயம் வருகிறது. சீசன் இல்லாததால் தற்போது வெங்காயம் வரத்து குறைந்து விட்டது. கிறிஸ்துமஸ், புத்தாண்டு, பொங்கல் உள்ளிட்ட பண்டிகைகள் நெருங்குவதால் வெங்காயத்தின் தேவை பலமடங்கு அதிகரித்துள்ளது.

இதனால், வெங்காயம் விலை கடந்த இரு வாரங்களில் 3 மடங்காக அதிகரித்துள்ளது. கடந்த 15 நாட்களுக்கு முன், தூத்துக் குடியில் கிலோ ரூ.20க்கு விற்ற சின்ன வெங்காயம் தற்போது கிலோ ரூ.70 ஆக உயர்ந்துள்ளது. கடந்த வாரம் கிலோ ரூ.15க்கு விற்ற பல்லாரி(பெரிய வெங்காயம்) கிலோ ரூ.30 முதல் ரூ.40 வரை விற்கப்படுகிறது. இந்த விலையேற்றத்தால் பொதுமக்கள் கவலையடைந்துள்ளனர்.

தற்போது உள்ளூர் வெங்காயம் வரத்து குறைவாக உள்ளது. பாவூர்சத்திரம், விளாத்திகுளம் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து  வெங்காயம் வரத்து முற்றிலும் நின்று விட்டது. வெளிமாநிலங்களில் இருந்து வரும் வெங்காயம்தான் விற்கப்படுகிறது. ஜனவரிக்கு பின்னர் வரத்து அதிகரிக்கும் பட்சத்தில் விலை குறைய வாய்ப்புள்ளது. எனவே, பொங்கல் பண்டிகை வரை இதே நிலைதான் நீடிக்கும் என காய்கறி வியாபாரிகள் தெரிவித்தனர். 'வெங்காயத்தை உரித்தால்தான் கண்களில் நீர் வரும். ஆனால், இப்போது இதன் விலையை கேட்டாலே கண்ணீர் வருகிறது' என்று மக்கள் கூறுகின்றனர்.

**பனிப்பொழிவால்    மல்லிகை   விலை   ரூ.2000**



நெல்லை : நெல்லையில் தொடரும் பனிப்பொழிவால் பூக்கள் விலை கடுமையாக உயர்ந்து வருகிறது. நெல்லை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் விளையும் பூக்கள், பாளை மற்றும் சங்கரன்கோவில் பூ மார்க்கெட்டிற்கு எடுத்து வரப்படுகின்றன. மார்கழி மாதம் துவங்கும் முன்பே இரவு நேரங்களில் அதிக பனி விழுவதால் பூக்கள் விளைச்சலில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இதனால் சங்கரன்கோவில் மற்றும் பாளை பூ மார்க்கெட்டுக்கு பூக்கள் வரத்து குறைய துவங்கியுள்ளது. இதன் எதிரொலியாக கடந்த 2 தினங்களாக மல்லிகை விலை கிலோ ரூ.2 ஆயிரத்திற்கும் மேல் விற்கப்பட்டு வருகிறது. பாளை பூ மார்க்கெட்டில் நேற்று, மல்லிகை கிலோ ரூ.2000, கனகாம்பரம் ரூ.1000, பிச்சி ரூ.500, சம்பங்கி ரூ.100, ரோஸ் ரூ.100 என்ற விலையில் விற்கப்பட்டது.

## 2.8 சதவீதம் குறையலாம்



மும்பை : இந்திய பொருளாதார கண்காணிப்பு மையம்(சிஎம்ஐஇ) வெளியிட்டுள்ள மாதாந்திர அறிக்கையில் கூறியிருப்பதாவது: நடப்பாண்டில் அரிசி, கோதுமை உள்பட முக்கிய பயிர்கள் உற்பத்தி 2.3 சதவீதம் குறையும் என ஏற்கனவே மதிப்பீடு செய்திருந்தோம். ஆனால், இது 2.8 சதவீதமாக இருக்கும் என தற்போது கணிக்கப்படுகிறது. ஏனெனில், காரிப் பருவத்தில் பாசனப் பகுதி 4.1 சதவீதம் குறைந்து, 375 லட்சம் ஹெக்டேரில்தான் பயிரிடப்பட்டிருக்கிறது.

இதனால், நடப்பாண்டில் அரிசி உற்பத்தி 10 கோடி டன்னாக குறையலாம். கோதுமை உற்பத்தியும் சரிந்து, 9.38 கோடி டன்னாக இருக்கும். அதேபோல், பருப்பு வகைகள் உற்பத்தி 9.8

சதவீதம் சரிந்து, 3.76 கோடி டன்னாக இருக்கும். பயறு வகைகள் உற்பத்தி 1.69 கோடி டன்னாக இருக்கும் என மதிப்பிடப்படுகிறது.

02nd dec 2012 P.M

**உளுந்து , துவரம் பருப்பு விலை ரூ.500 வரை சரிவு**



விருதுநகர்: வரத்து அதிகரிப்பால் உளுந்து மூட்டைக்கு ரூ.300, துவரம்பருப்பு ரூ.500 வரை விலை சரிந்துள்ளது. கடலை எண்ணெய் விலை உயர்ந்துள்ளது.

கர்நாடகா, மகாராஷ்டிராவில் இருந்து புது துவரை வரத்து துவங்கி உள்ளதால், துவரம்பருப்பு(100 கிலோ) மூட்டைக்கு ரூ.500 விலை குறைந்துள்ளது. குல்பர்கா துவரை குவிண்டால் ரூ.4,300லிருந்து ரூ.3,800 ஆக குறைந்துள்ளது. பர்மா துவரை&ரூ.3,500, துவரம்பருப்பு லயன்&ரூ.6,500, உடைசல் துவரம்பருப்பு& ரூ.5,500, பர்மா துவரம்பருப்பு&ரூ.5 ஆயிரம் என குறைந்துள்ளது. பர்மாவில் இருந்து உளுந்து வரத்து அதிகரித்துள்ளதால் உளுந்தம்பருப்பு மூட்டைக்கு ரூ.300 விலை குறைந்துள்ளது. லயன்உளுந்து ரூ.4,100லிரு ந்து ரூ.3,800 ஆக விலை குறைந்துள்ளது. மற்ற உளுந்து விலை (குவிண்டால்) வருமாறு: பர்மா உளுந்து(பருவட்டு) &ரூ.3.500, பர்மாஉளுந்து(பொடி)&ரூ.3,300, உருட்டு லயன் உளுந்தம் பருப்புரூ.5,500, பர்மா பருவட்டு&ரூ.4,600, பர்மா பொடி&ரூ.4,100, தொளிஉளுந்து&ரூ.4,500 என விலை குறைந்துள்ளது. கடலைப்பருப்பு வரத்து இல்லாத நிலையில் வடமாநிலங்களில் கடலைப்பருப்பு 80கிலோ மூட்டை ரூ.5,700 லிருந்து ரூ.5,900 ஆக உயர்ந்துள்ளது. இதனால், கடலைஎண்ணெய் (15 கிலோ) டின் ரூ.1800லிருந்து ரூ.1820 ஆக விலை உயர்ந்துள்ளது. கடலை புண்ணாக்கு 100 கிலோ மூடை ரூ.4 ஆயிரத்து 850 லிருந்து ரூ.4 ஆயிரத்து 700 ஆக விலை குறைந்துள்ளது. பருப்பு வணிகர் மனோகரன் கூறுகையில், 'பாசிப்பயறு விளைச்சல் இல்லாததால் பொங்கல் பண் டிகை

தேவை காரணமாக பாசிப்பயறு, பாசிப்பருப்பு விலை மூட்டைக்கு ரூ.300 வரை உயரலாம்' என்றார்.

இன்றைய வேளாண் செய்திகள்

02.12.2012 P.M

03.12.2012 A.M

**வங்க கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வு : கடலோர மாவட்டங்களில் இன்று மழை பெய்யும் - வானிலை மையம் அறிவிப்பு**

சென்னை,

வங்க கடலில் உருவான குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை அடுத்த 48 மணி நேரத்தில் தீவிரமடைய வாய்ப்பு உள்ளது என்றும், இன்று தமிழக கடலோர மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் மழை பெய்யும் என்றும் வானிலை மைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

எப்போது மழை வரும்

தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை காலம் நடந்து வருகிறது. ஆனால் போதிய மழை இன்னும் பெய்யவில்லை. இந்த வருடமும் மழை பொய்த்துவிடுமோ என்று மக்கள் அஞ்சுகிறார்கள். ஆனால் சில வருடங்களில் ஜனவரி முதல் வாரத்தில் கூட பலத்த மழை பெய்தது உண்டு. தமிழ்நாட்டில் எப்போது மழை பெய்யும் என்று எல்லா தரப்பு மக்களும் எதிர்பார்த்து இருக்கிறார்கள். இந்த நிலையில் வங்க கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகி உள்ளது. இது குறித்து சென்னை வானிலை மண்டல ஆராய்ச்சி மைய அதிகாரிகள் கூறியதாவது:–

குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி

தென் கிழக்கு வங்க கடலில் நிலவி வந்த குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி, மத்திய தெற்கு வங்க கடலில் உள்ளது. அது அடுத்த 48 மணிநேரத்தில் வலுவடைந்து தீவிரமடைய வாய்ப்பு உள்ளது. அவ்வாறு வலுவடைந்தால் மழை பெய்ய வாய்ப்பு உள்ளது. இன்று தமிழ்நாட்டின் கடலோர மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும். சென்னையில் இன்று மாலையில் ஒரு சில பகுதிகளில் மழை பெய்ய வாய்ப்பு உள்ளது. நேற்று காலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் தமிழ்நாட்டில் மழை எதுவும் பதிவாகவில்லை. இவ்வாறு வானிலை மைய அதிகாரி தெரிவித்தார்.

## நடப்பு நிதி ஆண்டில் உணவு தானியங்கள் உற்பத்தி 2.8% குறையும்

நடப்பு 2012–13–ஆம் நிதி ஆண்டில் முக்கிய உணவு தானியங்கள் உற்பத்தி 2.8 சதவீதம் குறையும் என இந்திய பொருளாதார கண்காணிப்பு மையம் (சி.எம்.ஐ.இ) தெரிவித்துள்ளது. பயிரிடும் பரப்பளவு குறைந்துள்ளதே இதற்கு காரணம் என தெரிய வந்துள்ளது.

### பயிரிடும் பரப்பளவு

நவம்பர் 2–ந் தேதி நிலவரப்படி நெல் பயிரிடும் பரப்பளவு 4.1 சதவீதம் குறைந்து 3.75 கோடி ஹெக்டேராக குறைந்துள்ளது. இதனையடுத்து, நடப்பு நிதி ஆண்டில் அரிசி உற்பத்தி சென்ற நிதி ஆண்டைக் காட்டிலும் 3.4 சதவீதம் குறைந்து 10.08 கோடி டன்னாக குறையும் என மதிப்பிடப்பட்டுள்ளது. கோதுமை உற்பத்தி 0.1 சதவீதம் குறைந்து 9.38 கோடி டன்னாக குறையும் என முன்னறிவிப்பு செய்யப்பட்டுள்ளது.கம்பு, சோளம் உள்ளிட்ட தானியங்கள் உற்பத்தி 9.8 சதவீதம் சரிவடைந்து 3.76 கோடி டன்னாக குறையும் என கணிக்கப்பட்டுள்ளது. கம்பு உற்பத்தியில் ராஜஸ்தான் மாநிலம் முன்னிலையில் உள்ளது. இம்மாநிலத்தில் பருவம் தவறி பெய்த மழையால் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து, நடப்பு நிதி ஆண்டில் கம்பு உற்பத்தி 28.4 சதவீதம் சரிவடைந்து 1.01 கோடி டன்னிலிருந்து 72 லட்சம் டன்னாக குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஏனென்றால் கம்பு பயிரிடும் பரப்பளவு 24.8 சதவீதம் குறைந்து 60.8 லட்சம் ஹெக்டேராக குறைந்துள்ளது.

### பருப்பு வகைகள்

நடப்பு நிதி ஆண்டில் பருப்பு வகைகள் உற்பத்தி 1.5 சதவீதம் குறைந்து 1.69 கோடி டன்னாக குறையும் என சி.எம்.ஐ.இ. தெரிவித்துள்ளது. இந்தியா பருப்பு வகைகள் தேவைப்பாட்டிற்காக இறக்குமதியைச் சார்ந்துள்ளது. எனவே, இறக்குமதி அதிகரித்து வர்த்தக பற்றாக்குறை உயரும். உணவு தானியங்கள் உற்பத்தி குறைவதால் பணவீக்கம் அதிகரிக்கும். கடந்த அக்டோபர் மாதத்தில் மொத்த விலை பணவீக்கம் 7.45 சதவீதமாக குறைந்துள்ளது. செப்டம்பர் மாதத்தில் இது 7.81 சதவீதமாக இருந்தது. இருப்பினும், இது பாரத ரிசர்வ் வங்கியின் கட்டுப்பாட்டு அளவைக் காட்டிலும் அதிகமாக உள்ளது.